1975 மார்ச் 22]

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், தேவிகோட்டை—பூவந்திக்கு இடையில் உள்ள ஓடையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. த. சோணையா : நம்முடைய அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எந்த ஊருக்கும் எந்த ஊருக்கும் இடையே இல்லையென்று சொல்கிறார். ஏனென்றால், கேள்வியே மாறுபட்டு வந்திருப்பதால், கேள்வியைச் சொல்லி பதிலைத் திரும்பவும் சொல்வாரா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாடபுரம் தேனி—ஏர தி சாலை. அதனுடைய நீளம் 9.2 கிலோ மீட்டர். மண் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. அவர் கேட்டிருப்பது பாலம் கட்டுவது முடியுமா என்பது. அதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என்பதனாலே, வறட்சி நிதியிலிருந்து செலவு பண்ண முடியாது. ஆகவே, பணம் வந்த பிற்பாடு செலவு செய்யப்படும்.

கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் தெரு விளக்குகள்.

*428 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவந்தராச கண்டிகை ஆகிய கிராமங்களில் இது வரை தெரு விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில் மேற்கண்ட ஊர்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது அறிக்கையில் பெரிய பாளையத்தான் கண்டிகை, கோவந்தராச கண்டிகை ஆகிய மதுராக்களில் தெரு மின் விளக்குகள் அமைக்க குருவராச கண்டிகை ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும், மேற்படி தீர்மானத்திற்கு ஏற்ப தெரு மின் விளக்குகள் அமைக்க மின் வாரியத்தை அணுகி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

பொன்னம்பலசாமி மடம்.

*429 வினா—திரு. எஸ். முருகையன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலசாமி மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் சிலவற்றை விற்க அறநிலையத்துறை ஆணையாட்டம் அனுமதி பெறப்பட்டதா?

(இ) எதற்காக மேற்படி சொத்துக்கள் விற்கப்பட்டன?

(உ) விற்ற பணம் எவ் வழியில் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இந்நிறுவனம் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் கீழ் வராதபடியால் அறநிலையத்துறை ஆணையரின் அனுமதி தேவையில்லை.

(இ) நிலங்களைச் சாகுபடி செய்பவர்கள் அல்லது குத்தகைக்கு எடுத்தவர்களிடமிருந்து குத்தகை ரொக்கம் மற்றும் நெல் வசூல் செய்வதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக நிலங்கள் விற்பனை செய்யப்பட்டது.

(உ) விற்பனை தொகையில் ஒரு பகுதி மட்டும் வசூலிக்கப்பட்டு அத்தொகையை மடத்தின் நிர்வாகத்துக்காகவும், கட்டிட மராமத்துக்காகவும் செலவிடப்பட்டது போக மீதியை சேமிப்புக் கணக்குகளில் "கோயிலூர் மடாலயம் ஆண்டவர் மன்றம்" என்ற பெயரில் போடப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மடத்துக்குச் சொந்தமான ஏராளமான நிலங்களையெல்லாம் குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலையிருக்கிறபொழுது, அரசு அம்மாதிரி சிந்திக்கின்ற பொழுது, குத்தகை சரியாக வரவில்லை யென்று சொல்லி, இந்த நிலங்களை அங்கு விற்றிருக்கிறார்கள்—அதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த மடத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய துறையின் ஆளுகைக்குட்பட்ட மடம் அல்ல. தனியார் நடத்துகின்ற ஒரு மடமாகும். ஆனால் அந்த மடத்தினுடைய நிர்வாகத் திட்டத்தின்படி அதைத் தனியார் நடத்தி வந்தாலும் அந்த நிலத்தை விற்றது தவறு என்பதை நம்முடைய இலாக்கா பரிசீலனை செய்து கண்டு பிடித்ததற்குப் பிறகு இன்னும் பல்வேறு நிர்வாகக் கோளாறுகள் அங்கே இருக்கிற காரணத்தினால் அந்த மடத்தை அரசாங்கத்தினுடைய ஆளுகைக்குக் கொண்டுவரலாம் என்று கருதி தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இம்மாதிரி சாகுபடி செய்யக்கூடிய குத்தகைக்காரர்களே அந்த நிலத்தைக் கிரயத்திற்கு எடுத்துக்கொள்ள விரும்பினால் அந்த நிலத்தை அவர்களுக்குக் கொடுக்க அரசு அனுமதியளிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது: உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டம் குழுவினுடைய பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய சிபாரிசுகள் வந்ததற்குப் பிறகுதான் அரசு அதைப் பற்றி ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.